Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி புரட்டாதி 20 ஆம் நாள் ஜ. அவ்வல் பிறை 29 (6-10-64) செவ்வாய்க்கிழமை இதழ் 237

போன்: 506 தந்தி: 'வணக்கம்'

ஆ. அப்பையா அன் கோ.

82, கே. கே. எஸ். ரோட், 54, பெரியகடை, யாழ்ப்பாணம்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மாபெரும

மலிவு விற்பனை

தொடர்ந்து நடைபெறுகிறது என்பதை அன்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

கூட்டரசாங்கத்துக்கு

# எதிர்ப்பு முன்னணி உருவாகிறது

## பிலிப், கே. எம். பி., ஆர். ஜி., மேத்தானந்தா முயற்சி

### இம்மாதத்துக்குள் முடிவு தெரியும்

கொழும்பு, திங்கள்

கூட்டரசாங்கத்தை எதிர்த்து திரு. பிலிப் குணவர்த்தன, திரு. கே. எம். பி. ராஜரத்ன, திரு. ஆர். ஜி. சேனநாயகா ஆகியோர் பௌத்த ஜாதிக பலவேகயா தலைவர் திரு. எல். எச். மெத்தானந்தாவின் ஆதரவுடன் ஒரு முன்னணி அமைக்கவிருக்கின்றனர்.

இந்த மாதத்துக்குள் இந்த முன்னணி உருவாக்கபபடுமென அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் திரு. மெத்தானந்தாவின் இல்லத்திலோ அல்லது திரு. ஆர். ஜி. சேனநாயகாவின் இல்லத்திலோ நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

பிரஜா உரிமை வழங்குவது காணிவிநியோகம், பத்திரிகை மசோதா ஆகியவை உட்பட வேறுபலதரப்பட்ட விஷயங்களில் அரசாங்கம் கொண்டிருக்கும் கொள்கையை எதிர்ப்பது, உருவாக்கப்படவிருக்கும் இந்த முன்னணியின் நோக்கமாகும்

சீனவிலிருந்து திரும்பியுள்ள திரு. ராஜரத்ன, அரசாங்கத்தின் பல்வேறு அம்சங்களை எதிர்ப்பதற்காக திரு. பிலிப் குணவர்த்தன திரு. மெத்தானந்தா ஆகியோருடன் தாம் ஒத்துழைக்க விருப்பம் கொண்டுள்ளதாக பௌத்த ஜாதிக பலவேகயா அங்கத்தவர்களைக் கண்டு தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

திரு. ஆர். ஜி. சேனநாயகாவும், அரசாங்கத்தை எதிர்ப்பவர்களோடு தாம் ஒத்துழைக்கத் தயார் என ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளார்.

எல்லோரும் இணைந்து செயலாற்றக் கூடியவகையில் ஒரு பொதுக் கொள்கை உருவாக்கப்பட விருப்பதாக பௌத்த ஜாதிக பலவேகயா தெரிவித்துள்ளது.

பத்திரிகை மசோதாவை

## எதிர்க்கும் கட்சிகள் 8-ம் திகதி கூடும்.

கொழும்பு, திங்கள்

பத்திரிகை மசோதாவை எதிர்க்கும் சகல எதிர்க்கட்சிகளும், ஜனப்பிரதிநிதிகள் சபையில் இந்த மசோதா விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பது பற்றி தீர்மானிப்பதற்காக இம்மாதம் 8-ந் திகதி பார்லிமெண்டில் கூடவிருக்கின்றன

பத்திரிகைமசோத விவாதம் சம்பந்தமாக தீர்மானிக்க சகல பார்லிமெண்டரிக் கட்சித் தலைவர்களையும்கொண்ட ஒரு மகாநாட்டை நடத்துவதற்கான ஆலோசனையை யு. என். பி.த் தலைவர் தெரிவித்துள்ளதாகவும் இந்தயோசனை ஏற்கப்படுமாயின யு என். பி., தமிழரசுக்கட்சி, எம். ஈ. பி., சமசமாஜக்கட்சி (புரட்சிக் குழு), ஜாதிக விமுக்தி பெரமுன ஆகிய கட்சிகளும் டாக்டர் தகநாயக்கா, திரு. ஆர். ஜி சேனநாயகா ஆகியோரும் 8-ந் திகதி கூடி ஆலோசனை நடத்துவரென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## 466 பேர் கொலை

கொழும்பு திங்கள்

1964 ம் வருடத்தில் சென்ற மாதம் 30 ம் திகதி வரையான காலத்தில் இது வரை 466 கொலைகளும், 805 மரணவிபத்துகளும் நிகழ்ந்துள்ளன. இவற்றுள் சென்ற மாதம் 44 கொலைகளும் 80 மரண விபத்துக்களும் இடம் பெற்றன.

---

வடபகுதி அசைஸ்

# 'எதிரியின் மனைவியும் இறந்தவரும் கூச்சமின்றி நன்ருக கதைப்பார்கள் இறந்தவரும் எதிரியும் நெருங்கிய நண்பர்கள்'

## பருத்தித்துறை கொலைவழக்கில் இறந்தவரின் தாயார் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்

"எதிரியின் மனைவி தனது வீட்டிற்கு அடிக்கடி வருவதாகவும் அப்பொழுது இறந்தவராகிய தனது மகன் சூரசங்காரமும் எதிரியின் மனைவியும் கூச்சமெதுவுமின்றி, நன்ருக நெருங்கிக் கதைப்பார்களென்றும், இறந்தவரும் எதிரியும் நெருங்கிய சிநேகிதர்களென்றும், தனது மகன் வெளியில் செல்லும் போது நன்ருக உடையணிந்து செல்வாரென்றும்" பருத்தித்துறை கொலைவழக்கில் சாட்சியமளித்த போது இறந்தவரின் தாயார் வைரமுத்து நாகம்மாகூறினர். நேற்றுக் காலை விசாரணை ஆரம்பமாவதற்கு முன் எதிரியிடம் "குற்றவாளியா?" அல்லது "சுற்றவாளியா?" என்று கேட்டபொழுது அவர் 'குற்றவாளி' என்று கூறினர். ஆனுலும் விசாரணை தொடர்ந்து நடைபெற வேண்டுமெனக் கூறி நீதியரசர் விசாரணையை நடத்தினர்.

பருத்தித்துறை சூரசங்காரம் கொலை வழக்கு வடபகுதி அஸைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ தம்பையா கியூ ஸி முன்னிலையில் நேற்றுக காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணை ஆரம்பமாகு முன்பே எதிரி தான் 'குற்றவாளி' என ஒப்புக்கொண்டார் எனினும் நீதியரசர் விசாரணை தொடர்ந்து நடைபெற வேண்டுமெனத் தெவித்தார்.

### குற்றச்சாட்டு

இவ்வழக்கில் 1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27-ம் திகதிக்கும் 28-ம் திகதிக்கும் உட்பட, வைரமுத்து சூரசங்காரம் என்பவரைக் கொலை செய்ததாக வேலும்மயிலும் ராஜசேகரம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### வழக்கறிஞர்கள்

எதிரி சார்பில் திரு. ரிக்னேசலிங்கம், திரு. என். நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக வழக்கறிஞர் திரு. பி. பாலவடிவேலு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் ஆர். ஐ. ஒபயசேகரா ஆஜரானர்.

குற்றச்சாட்டுப்பத்திரம்வாசிக்கப்பட்டபின் எதிரியிடம் 'குற்றவாளியா?' 'சுற்றவாளியா' என்று கேட்டபொழுது எதிரி 'குற்றவாளி' எனக் கூறினர். எனினும் நீதியரசர் விசாரணையைத் தொடர்ந்து நடத்தினர்.

சாட்சிகள், சாட்சியமளிக்கப்படுமுன் ஜூரர், சபையினர் வெளியேற்றப்பட்டனர். ஜூரர்களின்றி சுமார் 2 மணிநேரம் சட்டப் பிரச்னை ஆராயப்பட்டது. அதன்பின் காலை 11-10 மணிக்கு ஜூரர்கள் வந்து தங்கள் ஆசனத்தில் அமர்ந்து கொண்டனர்.

### டாக்டர் சாட்சியம்

தேநீர் இடைவேளைக்குபின் 11-30 மணிக்கு மீண்டும் விசாரணை ஆரம்பமானது. முடிக்குரிய தரபபில் முதலாவது சாட்சியாக டாக்டர் பொன்னுத்துரை அழைக்கப்பட்டார்.

அவர் கூறியதாவது:-

சூரசங்காரத்தின் சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்தேன். சடலத்தை வைரமுத்து நாகம்மாள், நடராசா சரோஜினிதேவி அடையாளம் கண்டுகொண்டார்கள் இறந்தவரின் தலையில் நான்கு காயங்கள் காணப்பட்டன. முதலாவது காயம் தலையின் வலது பக்கத்திலும், மற்றக் காயங்கள் மற்றப்பக்கத்திலும் காணப்பட்டன. இந்த நான்கு காயங்களும் வெளிக்காயங்கள். வயிற்றிலுள்ள பொருட்களில் மதுபானம் கடுமையாக மணத்தது. (கடற்கரைக் கற்கள் காணப்பட்டன.) இக்கற்களால் தாக்கபபட்டதால் அப்படியான காயங்கள் ஏற்பட்டிருக்கும், முதலாவது காத்தைய விட்டு மற்ற மூன்று காயங்களும் பலமான அடியொன்றினுல் ஏற்பட்டிருக்கும்.

(5-ம் பக்கம் பார்க்க)

---

## இலங்கை பிரஜா உரிமையை நிரூபிக்க கோரிக்கை

### முன்னுள் எம். பி. தேமிசுக்கு காணிப்பதிவு அதிபர் அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

நிதிச்சட்டத்தின் காணிப் பதிவு விதிகளின்கீழ் இலங்கைப் பிரஜாவுரிமையை நிரூபிக்குமாறு முன்னுள் கொழும்பு மத்தியதொகுதியின் 3-வது எம். பி. திரு. மனுவேல் வரியப்பா தேசிஸ் கேட்கப்பட்டிருக்கிருர்.

திரு. தேமிஸும், மற்றும் சமர் ஆயிரம் பேர்களும் அவர்களது பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களையும், அவர்களது தந்தைமார்களின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களையும் சமர்ப்பித்து தங்கள் பிரஜா உரிமையை நிருபிக்குமாறு காணிப்பதிவு மா அதிகாரியால் கோரப்பட்டிருக்கிருர்கள்.

திரு. தேமிஸ், சமீபத்தில் தான் வாங்கிய காணியை பதிவு செய்ய பதிவு அதிகாரிக்கு விண்ணப்பித்திருந்தார். காணிப்பதிவு மா அதிபரின் திருப்திக்கேற்றவகையில் திரு. தேமிஸ் தன் இலங்கை பிரஜாவுரிமையை நிருபிக்கத் தவறினுல், இலங்கைப் பிரஜைகளல்லாதோருக்கு உள்ளபடி காணியின் விலையை பொறுத்து 100 சத விகித வரி கட்டாமல் அவரது காணியை பதிவு செய்ய முடியாது.

அவர் 100 சத விகித வரி கட்டினுல் தான் இலங்கைப் பிரஜையல்ல என வலிய பிரகடனப்படுத்தியதாய் இருக்கும்.

---

## பெருமாள் கோவில் திருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ்.

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் வருடாந்த உற்சவம் இன்று முற்பகல் நடைபெறும் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகிறது. இம்மாதம் 14-ந் திகதி பகல் சித்திர ரதோற்சவமும் அடுத்தநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும், வெள்ளிக்கிழமை திருக்கல்யாணத் திருவிழாவும் நடைபெறும்.

### மணிவாக்கு

இந்தியாவிலே சோஷலிஸ, அரசியல் கருத்துக்களை பரப்பு முன் ஆன்மீக எண்ணங்களை நாடெங்கும் வெள்ளமாகப் பரப்புங்கள். உபநிடதங்கள், வேதங்கள், புராணங்கள் முதலியவற்றிலுள்ள ஆச்சரியமான உண்மைகளை நாடெங்கும் எல்லோருக்கும் தெரியப்படுத்துவதே நமது முதல் வேலையாகும்.

—சுவாமி விவேகானந்தர்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு புரட்டாதி மீ 20 உ. (6-10-64)


## கொள்ளை லாபத்துக்குக் கடும் தண்டனை

கொள்ளை லாபம் அடிக்கும் வர்த்தகர்களுக்கு கடும் தண்டனை விதிக்கக்கூடியவகையில் சட்டங்களைத் திருத்த வேண்டும் என்று கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கையில் தெரிவித்துள்ளார். இந்த முக்கிய யோசனை அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டும்.

கட்டுப்பாட்டுவிலை 91 சதமாக இருக்க பதினைந்து அவுன்ஸ் மாட்டிறைச்சியை ஒரு ரூபாய் பத்துசதமாக விற்றாராம் ஒரு கடை ஊழியர். அவருக்கு 7500 ரூபாய் அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கையிலேயே மாஜிஸ்டிரேட் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். வாழ்க்கைச் செலவைக் குறைக்கப் பலரும் பெரும் முயற்சி செய்கையில் கொள்ளைலாபம் அடிப்பவர்களை சமூகவிரோதிகளாகவே கருத வேண்டும். பத்தொன்பதுசத லாபத்துக்கு ஏழாயிரத்துஐநூறு ரூபாய் அபராதம் அதிகமென்று தோன்றலாம். ஆனால் ஊழியர் அபராதம் கட்டமுடியாமல், சிறைக்கு அனுப்பப்படுகையில் கடை முதலாளி தப்பிவிடக் கூடியதாக இப்போது சட்டமிருக்கின்றது. எய்தவனிருக்க அம்பை நோவதுபோல் கொள்ளை லாபமடிக்கும் பெரிய முதலைகள் தப்பிப் போகசிறிய ஊழியர்களையே தண்டனைக்குள்ளாக்குவது நேர்மையாகாது. இந்த வழக்கில் அபராதம் விதிக்கப்பட்டவர் தாம் கடைமுதலாளியல்லவென்றும் வேறு ஒருவரின் சம்பளத்துக்கு வேலைசெய்பவரென்றும் தெரிவித்திருக்கிறார். சம்பளத்துக்கு வேலைசெய்யும் ஊழியர்கள் அகப்பட்டுக் கொண்டு பெரிய முதலாளிகள் தப்பிவிட்டால் அவர்கள் மேலும் கொள்ளைலாபம் அடிக்க ஏதுவாகும். இதற்கு இடமில்லாத வகையிலும் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும்.

கொள்ளை லாபமும், ஊழலும் தனிப்பட்ட வர்த்தகர்களிடம் மட்டுமல்லாது அரசாங்க, கூட்டுஸ்தாபன, கூட்டுறவுத்துறைகளிலும் நிலவுவது பகிரங்க இரகசியம். இவற்றை ஒழித்துக்கட்டுவதற்கு குற்றம் செய்பவர்களுக்கு கடும் தண்டனை விதிக்கக்கூடிய வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டியது அவசரமும் அவசியமுமாகும்.

## பழிவாங்கும் நடவடிக்கை

உத்தியோக மொழிச்சட்டம் காரணமாக அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஊழியர்கள், கூட்டுஸ்தாபனங்கள், ஸ்தலஸ்தாபனங்கள் மற்றும் அரசாங்கத் துறைகளில் தொழில் பெறுவதைத் தடைசெய்ய வேண்டுமென்று நீதி அமைச்சு அரசாங்கத்தைக் கோரியிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இக்கோரிக்கையை அரசாங்கம் ஏற்குமானால் அது அநியாயமும் கொடுமையுமாகும்.

ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த ஊழியர்களின் சேவையை மொழி காரணமாக அரசாங்கம் இழந்துவிட்டதே யென்று கவலைப்பட வேண்டியிருக்க வேறுதுறைகள்கூட அவர்களது திறமையைப் பயன்படுத்தக் கூடாது என்று நீதிஅமைச்சு கோருவது நீதியாகத் தோன்றவில்லை. இது பழிவாங்கும் நடவடிக்கையாகவே தென்படுகிறது. உத்தியோகமொழி காரணமாக வேலையைவிட்டு வெளியேறிய பலரின் சேவையை வெளிநாடுகள் சில பயன்படுத்தி முன்னேறுகின்றன. இலங்கை புள்ளிவிபர இலாகா டைரக்டராகப் பணியாற்றிய திரு. மாணிக்கஇடைக்காடர்சூடான் தலைநகரான கார்ட்டுமில் ஐ.நா. உணவு விவசாய ஸ்தாபனத்தின் கீழ்வேலை பார்க்கும் அதேசமயம் கார்டூம் பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராகவும் இலவசப் பணி புரிந்து வருவதும் அவரது ஆற்றலை அந்த நாடு பயன்படுத்துவதும் இதற்குப் போதிய சான்று.

மொழிப் பிரச்னைக்கு விரைவில் சுமுகமான நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டு வேண்டுமென்றும் விரைவில் இதற்குத் தீர்வு கிடைத்துவிடுமென்றும் பிரதமரும் மற்றும் பொறுப்புள்ள மந்திரிகளும் நம்பிக்கை தெரிவித்துவரும் இச்சமயத்தில் உத்தியோக மொழி காரணமாக ஓய்வு பெற்றவர்மீதும் பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது நல்லதல்ல. மொழிப்பிரச்னைக்கு ஒரு முடிவு கிடைக்கும் வரையாவது இதுபோன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் ஒத்திவைக்குமென்றும் நீதி அமைச்சின் கோரிக்கையை அரசாங்கம் நிராகரிக்குமென்றும் எதிர்பார்ப்பது மிகையல்ல.

# அருளுக்கோர் அபிராமி

— வித்துவான் வசந்தா வைத்தியநாதன் —

கல்வி, செல்வம், அருள் மூன்றும் ஒருவனது வாழ்க்கையினைச் செம்மையாக்க இன்றியமையாதன. இம்மூன்றும் தெய்வத்திருவருளால் எய்துவன. இதனைப் பெற வேண்டியே புரட்டாசி திங்கள், வளர் ஒன்பது பிறையும் (ஒன்பது இரவு நவராத்திரி) திருவிழாக் கொண்டாடுகின்றோம். முதல் மூன்று நாட்களில் வீரத்தையும் அருளையும் வேண்டி மலைமகளையும் (துர்க்கை) இடை மூன்று நாட்களில் செல்வத்தினை வேண்டி அலைமகளையும் (லக்ஷ்மி) இறுதி மூன்று நாட்களில் கல்வியினை வேண்டிக் கலைமகளையும் (சரஸ்வதி) வழிபடுகின்றோம். அன்னையின் அருளினைப் பாடிக்களிக்கின்றோம். உலகீன்ற அருளுருவாம் அன்னையினைச் செந்தமிழால் வந்திருக்கும் பாமாலையே 'அபிராமி அந்தாதி' யாகும்.

அபிராமி என்ற சொல்லுக்கு அழகுமிக்குடையாள் என்பது பொருளாகும். மலைமகளுக்கு உரிய பல திருப்பெயர்களில் அபிராமி என்பதும் ஒன்று. அன்னையை வழிபடும் முதல் மூன்று நாட்களில் அபிராமி அந்தாதி, மஹிஷாசுரமர்த்தினி துதி முதலியவற்றை நாத்தழும்பேறப் பாடுவோர் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர். இம்மை மறுமை நலன்களும் பெறுவர்.

செம்மேனியம்மானின் செம்பாதியிலே இடம்பெற்ற அன்னையாம் அபிராமியின் அருளினை விதந்துகூறும் "அபிராமி அந்தாதி"யினை இயற்றிய அபிராமிப் பட்டரின் வரலாற்றினைக் காண்போம்.

பொய்யா வளமை நல்கும் பொன்னித் தாயின் அணைப்பிலே அமைந்த திருத்தலங்களுள் ஒன்று தான் திருக்கடவூர் மார்க்கண்டேயர் என்ற மாணியின் (பிரம்மச்சாரி) உயிரினைக் கவர வந்த காலனைக் காலில் உதைத்தருளிய சிறப்பினைக்கொண்ட அட்டவீரட்டானங்களுள் ஒன்றாக இத்தலம் ஒளிர்கின்றது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் காரி நாயனாரும், குங்கிலியக் கலய நாயனாரும் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் இரண்டாவதாக வைத்து எண்ணப்படுகின்ற திருக்களிற்றுப்படியாரை இயற்றிய உய்யவந்த தேவநாயனாரும் அவதரித்த சிறப்பினை உடையது. சைவ சமயக் குரவர்கள் மூவரால் பாடப்பெற்ற பெற்றியினை உடையது. இங்கு பிரகதீச மஹாராஜன் கார்த்திகைச் சோமவாரத்தில் பெருமானுக்குச் சங்காபிஷேகம் செய்வித்து பிறவிப்பிணி நீங்கி, பேரின்ப வீட்டை நண்ணினான் என்று வரலாறு கூறுகிறது. இத்திருத்தலம் தற்பொழுது சைவத்தையும் தமிழையும் தனது இரு கண்ணின் கருமணிகளெனப் போற்றிப் புரக்கும் திருத்தருமையாதீனத்தின் ஆளுகைக்குட்பட்ட இருபத்தேழு தேவஸ்தானங்களில் ஒன்றாக இலங்கி வருகின்றது.

பல ஆண்டுகளுக்கு முன் இத்தெய்வத் திருத்தலத்திலே அந்தணர் குடியிலே தோன்றியவர் அபிராமிப் பட்டர். இவரது முன்னோர்கள் கடவூரில் எழுந்தருளியிருக்கும், அமுதகடேசரிடத்தும், அபிராமி அம்மையிடத்தும், நீங்காத பேரன்பு பூண்டவர்கள். ஆதலால் இவருக்கும் அம்மையின் திரு பெயரே வழங்கலாயிற்று. இளமையினின்றே இருவரும் அபிராமி அம்மையிடத்து முறுகிய அன்பு கொண்டு, அன்னையிலே தன்னையிழக்கும் அற்புத யோகம் கைவரப்பெற்றிருந்தார். பராகாச வெளியிலே பராசக்தியின் பேரருள் திறத்துடன் ஒன்றி தன்வசமழிந்து, தாய்வசமான சேயானார் பட்டர். நாளும் அன்னையின் திருமுன்றிலில் அமர்ந்து ஆவி இன்ப அருட்கடலில் மூழ்கி முக்குளித்து எழுவார்.

இப்பெருநிலை ஊனக்கண் படைத்த உலகினர்க்குத் தெரியுமா? சிற்றம்பலவனிடத்திலே உள்ளம் பறிகொடுத்த உத்தமராம் மாணிக்கவாசகரையே பித்தனென்ற உலகம் தானே! உடன் உறைவோர் யாவரும் பட்டரை "சக்தி உபாசகர் ஊனும் கள்ளும் உண்டு திரியும் வாமமார்க்கத்தவர்" என்றுபலபலவாறு ஏசினர். ஆனால் புலன் கடந்த சிதாகாசப் பெருவெளியில் அம்மையுடன் இரண்டறக் கலக்கும் அபிராமப்பட்டருக்கு உலகோரின் புன்மைச் சொற்கள் செவியில் ஏறவில்லை. புகழையும் இகழையும் ஒன்றுக் கருதினர்.

இவ்வாறு இவர் அன்னையின் தண்ணளியில் தன்னை இழந்திருக்கும் ஒருநாள்.. தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னன், கன்னிப்பொன்னியினைக் கடலரசன் தன் கரங்களால் ஆரத்தழுவுகின்ற (காவிரியும் கடலும் சங்கமமாவது) தை அமாவாசையிலே கடலாகக் கருதி "பூம்புகார்" என்று இளங்கோவடிகளால் புகழப்படுகின்ற காவிரிப்பூம் பட்டினம் நோக்கித் தன் பரிவாரங்களுடன் புறப்பட்டான், இடையிலே "கடவூருறை உத்தமனை"த் தரிசிக்க விழைந்து திருக்கோயிலினுள் புகுந்தான் அமிர்தகடேஸ்வரத்தைத் தரிசித்த பின்பு அன்னை அபிராமியின் சந்நிதானத்துள் நுழைந்தான். அங்கோ, சின்னஞ்சிறிய மருங்கினில் செய்யப்பட்டுடனும், முத்தாரத்துடனும், பிச்சி மொத்த கன்னங்கரிய குழலுடனும் அருட்காட்சி வழங்குகின்ற அன்னையின் பேரெழில் நலத்தில் அண்ணம், சொல், செயல் மூன்றையும் ஒருமைப்படுத்தி இவ்வுலகச் சிந்தனையற்று வீற்றிருக்கும் பட்டரை மன்னன் கண்ணுற்றான்.

மன்னன் வந்த செய்தியோ பரிவாரங்கள் எழுப்பிய ஆரவாரமோ அவர் செவிகளில் விழவில்லை. வேந்தனையும் துரும்பெனக் கருதி வீற்றிருக்கும் இப் பெரியாருடன் அளவளாவ வேண்டும் என்ற விருப்பத்தனால், அருகிலிருந்தவர்களை நோக்கி 'இவர் யார்?' என்று வேந்தன் வினவினான் சற்றம் பார்த்திருந்த அவர்களும், "இவர் வாம மார்க்கத்தவர்; மதுமயக்கால் மதிமயங்கி இருக்கின்றார்" என்றார்கள். அருளொளுகும் அவரது முகத்தைப் பார்த்த மன்னர் அக்கூற்றை நம்பவில்லை. அவரிடம் சென்று "ஐயா! இன்று என்ன திதி? எவ்வளவு நாழிகை உள்ளது" என்று வினவினான். அருளுருவாம் அன்னையின் மதிமுகத்தையே, நெஞ்சத் தடாகத்தில் பார்த்திருக்கிற பட்டர், மன்னனின் வினவினை அரைகுறையாக செவியுற்று "இன்று சுத்த பூர்ணிமையாயிற்றே" என்றார். உலக மாயையாகிய காரிருளில் உழல்கின்ற வேந்தன் இருளையும் அன்னையின் அருள் வொளியினையன்றி, புற இருளைக் காணாத பட்டர் ஒளியையும் கண்டதில் வியப்பில்லை. பட்டரின் அகந்தினை அறியாத அரசனும், உண்மையினை ஒவது மற்றவர் கூறின உண்மையென நம்பினான்.

அரசன் செல்கின்ற ஆரவாரத்தினால் பட்டரது யோக நிலை கலைந்தது. சிந்தனை விழிப்புற்றது. தான் கூறியதை நினைவுகூர்ந்தார். அதுபோழ்து அரசன் அங்குவந்து "பட்டரே! மயக்கமா? இன்று பூர்ணிமை இல்லையாயின அரசன் ஆணை உம்மை நன்னெறிப்படுத்தும்; உணர்க!" என்று கூறிச் சினந்துசென்றான்.

பட்டரும் செய்தகை அறியாது அன்னையிடமே தஞ்சம் புகுந்து 'உதிக்கின்ற' என்று தொடங்கி, அம்மையைச் செந்தமிழால் பரவ ஆரம்பித்தார். அன்னையோ செந்தமிழ் வடிவினள். தமிழ் விருப்பம் தாயின் கருணையினைத் தாமதிக்கச்செய்தது. பாட்டோ எழுபத்தெட்டு ஆயிற்று. காலையும் மாலையாயிற்று. பகலவன் சாய்ந்து உலகெங்கும் இருட்போர்வை கவிந்து வரலாயிற்று. பட்டரது மனமோ பரபரத்தது கயமைக்குணம் பொருந்திய கீழ்மக்களோடு தாய் தன்னையும் கூட்டிவிட்டாளோ? என்று ஐயுற்றது மனம். இஎழுந்தது எழுபத்தொன்பதாம் பாடல்.

"விழிக்கே அருளுண் டபிராம
வல் லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்
டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கேசுழன் றுகவம்பாவங்
களேசெய்து பாழ் நரகக்
குழிக்கே அழுந்தும கயவர்தம்
மோடென்ன கூட்டினியே."

இப் பாடல் கேட்ட அன்னையின் மனம் பாகாய் உருகியது, தன் அருளினை வேண்டி மனம் குமைகின்ற தன் குழந்தையைக் கண்டாள் தனது தோட்டினைக்கழற்றி வானமண்டலத்து எறிந்து நிலவொளியை உண்டாக்கினாள். பின்பு யோக நித்திரையில் வீற்றிருக்கும் அன்பனை எழுப்பி "பார்சுத்த பூர்ணிமையை" என்று திருவாய்மலர்ந்தாள். அருளுக்கோர் அபிராமி அல்லவா.

(நாளை முடியும்)

## ஐயாறன் எழுதுவது

நேற்று மகாளய அமாவாசை யல்லவா? காலையில் ஒன்றும் சாப்பிடவேண்டாமென்று இருந்துவிட்டேன். வழக்கம் போல் வந்த பலகாரம் மேசை மீது காத்திருந்தது. பூனையம்மாவுக்கு எப்படித்தான் தெரியுமோ! மியாவ் மியாவ் என்று சொல்லிக்கொண்டே வந்து வட்டமிட்டது. பூனையார் இடியப்ப பலகாரம் செய்துகொண்டிருக்கையில், ஒரு காக்கையார் எங்கிருந்தோ பார்த்தார் போலும். காகாவென்று கத்தி வேறு பல காகங்களையும் அழைத்துக்கொண்டு சாப்பாட்டுக்கு 'ரெடியாக' வந்து அமர்ந்துவிட்டது!

சுமார் முப்பது காகங்களிருக்கும் அவற்றுக்கும் ஓரளவு காலை பலகாரமாயிற்று. சொதியையும் ருசிபார்த்தன. தேத்தண்ணீரையும் பூனையாரும், காக்கைகளும் மாறிமாறிப் பருகி பாத்திரத்தைக் காலி செய்து சென்றுவிட்டன.

பின்னர் சிறிது நேரம் கழித்து வந்து பார்த்தேன். கீழே சிந்தியிருந்த சொதியை பல்லாயிரம் சிற்றெறும்புகள் மொய்த்துக்கொண்டு, கியூவரிசையில் வந்து, ஒழுங்காகத் திரும்பிக்கொண்டிருந்தன. ஒரு நாள் ஒருபொழுது நாம் சாப்பிடாமல் இருந்தால், அந்த உணவு எவ்வளவு உயிர்களுக்கு உதவுகின்றதென்பதைக் கண்டேன். அமாவாசையன்று பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு அன்னதானம் செய்ததுபோன்ற உணர்ச்சியும் மனத்திருப்தியும் ஏற்பட்டது!

* * *

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் சென்னையிலே செய்த பல அரிய உபதேசங்களும் புத்தகமாக வெளியாகியுள்ளன அப்புத்தகத்தைப் புரட்டியபோது, ஏகாதசியன்று உபவாசமிருக்கவேண்டிய அவசியத்தை சுவாமிகள் விளக்கியுள்ளதைப் படித்தேன். மாதத்தில்வரும் இரு ஏகாதசிகளிலும் அந்த உபவாசம் இருப்பது உத்தமமென்றும், முடியாதவர்கள் பாலும் பழமும் சாப்பிடலாமென்றும், இப்படி வயிற்றுக்கு ஓய்வு கொடுப்பதால், மனம் அமைதியாக தெய்வ சிந்தனை செய்ய முடிவதுடன், தேக சுகமும் மேலாக இருக்குமென்றும் உபதேசித்துள்ளார்.

ஏகாதசி சமாச்சாரம் நம்மில் பலருக்கும் தெரியாது. தெரிந்தவர்களில் சிலர் அன்று "பலகாரம்" சாப்பிட்டு விரத மனுஷ்டிக்கின்றனர்.

பலம் என்றால் வடமொழியிலே பழந்துக்குச் சொல்லுவது. பலகாரம் என்றால் பழ உணவு. ஆனால் இங்காலத்தில் பலகாரம் என்றால் இட்லி, தோசை, இடியப்பம் முதலிய பலபல ஆகாரங்கள் என்று பழக்கத்துக்கு வந்துவிட்டதைப் பார்க்கின்றோம்! ஏகாதசி விரதமிருப்பவர்களும் அன்று வயிற்றுக்கு 'ரெஸ்டு' க்குப் பதிலாக இரட்டிப்பு வேலை கொடுப்பதாயின் பாவம் அந்த உடல்தான் என்ன செய்யும்! டாக்டர்களுக்குத்தான் நல்ல அதிர்ஷ்டம்!

லங்கணம் பரம ஒளஷதம் என்று கூறுவதுண்டு: லங்கணம் அல்லது பட்டினி போம்

(5-ம் பக்கம் பார்க்க)

கெய்ரோ மகாநாடு:

# பத்து அம்ச சாஸன வாசகத்தை இந்தியா சமர்ப்பித்தது

## மலேசிய பிரச்னை: மகாநாட்டுக்கு வெளியில் தீர்வுகாண முயற்சி

### சாஸ்திரி-நாஸர் நடத்திய "முக்கிய" பேச்சுக்கள்

கெய்ரோ, அக். 5

மண்டலசார்பற்ற நாடுகளின் மகாநாடு இன்று மாலை ஆரம்பமானது. இந்த மகாநாட்டில் 58 நாடுகள் கலந்து கொள்ளுகின்றன. மகாநாடு ஐந்துநாள்வரை நடைபெறும்.

**இந்தியாவின் 10 அம்சம்**

சமாதான சகவாழ்வுக் கொள்கையின் அடிப்படையில், பத்து அம்ச சாஸன வாசகத்தை இந்தியா இன்று தாக்கல் செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

● படைபலத்தை உபயோகிப்பதை கைவிடுதல். ● வழி வழி வந்த எல்லைகளை மதித்து நடப்பது. ● காலனி ஆதிக்கம், புதிய ஆதிக்கம் ஆகியவற்றை ஒழிக்க உறுதி கொள்வது. ● தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கைகளை வன்மையாகக் கண்டிப்பது. ● போர்த்துக்கலின் காலனி ஆதிக்க கொள்கையை பகிஷ்கரிப்பது. ● நடுநிலை மக் கொள்கையை ஸ்திரப்படுத்துவது. ● சர்வதேசப் பிரச்னைகளை சமாதான நோக்குடன் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்வது போன்ற பல யோசனைகள், அந்த வாசகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த யோசனைகளுக்கு அதிகமான நாடுகள் ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது

நேற்று இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியும் யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோவும், ஐக்கிய அரபுக்குடியரசுப் பிரதமர் அலிசாப்ரியும் நீண்டநேரம் சந்தித்து பேச்சுகள் நடத்தினர்.

**மலேஷிய பிரச்னை**

இதன்பின்னர் திரு. சாஸ்திரியும் திரு. அலிசாப்ரியும் நடத்திய பேச்சுகளில் மலேஸிய பிரச்னைபற்றி விவாதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. மண்டலசார்பற்ற நாடுகளின்மகாநாட்டுக்கு வெளியே இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும் என்று இரு தலைவர்களும் உறுதி கொண்டதாகத் தெரியவருகிறது. மலேஸியப் பிரச்னையைத் தீர்ப்பதில் இந்தியா அதிக கவனம் செலுத்துகிறதென்றும், மகாநாட்டுக்கு வெளியே தீர்வு காணப்பட்டாலும் ஆச்சரியப்படத் தேவையில்லையென்றும் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

**சாஸ்திரி-நாஸர் நீண்ட பேச்சு**

ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் நாஸரும் இந்தியப்பிரதமர் சாஸ்திரியும் நேற்று நீண்டநேரமாக பேச்சுகள் நடத்தினர். பல நாட்டுத் தலைவர்களும் கெய்ரோ நோக்கி வந்து கொண்டிருக்கையில் இவ்விரு தலைவர்களும் நடத்திய "விசேஷ" பேச்சுகள் மிகவும் முக்கியம் வாய்ந்தனவையாகவிருக்கும் என்று கூறப்படுகிறது. கெய்ரோ மகாநாடு குறித்து செய்திகள் வெளியிட்ட இங்குள்ள பத்திரிகைகள், நாஸர்—சாஸ்திரி பேச்சுகளுக்கே முக்கிய இடம் அளித்திருக்கின்றன.

நேற்று இந்திய தூதரகத்தில் பிரதமர் சாஸ்திரிக்கு அளிக்கப்பட்ட விருந்தில் 500 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## "ஷோம்பேயை அனுப்பாதீர்"

கெய்ரோ, அக். 5

மண்டலசார்பற்ற நாடுகளின் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காகக் காங்கோ பிரதமர் ஷோம்பேயை அனுப்பவேண்டாமென்று ஐ. அ. கு அதிபர் நாஸர், இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ ஆகியோர் காங்கோ அதிபரை தந்தி மூலம் கேட்டுள்ளனர்.

மகாநாட்டில் ஷோம்பே கலந்துகொள்ளக்கூடாதென்று அரசியல் கமிட்டி தீர்மானித்துள்ளதால் அவரை அனுப்ப வேண்டாமென்றும் ஆனால் காங்கோ பிரதமர் சுளவுபு கலந்து கொள்ளவேண்டுமென்றும் அத்தந்தியில் கோரப்பட்டுள்ளது.

## ஜோன்ஸன்-ஹியூம் வாழ்த்து

கெய்ரோ, அக். 5

கெய்ரோ மகாநாடு வெற்றியடையவேண்டுமென்று அமெரிக்க அதிபர் திரு லிண்டன் ஜோன்ஸனும், பிரிட்டிஷ் பிரதமர் சர் அலெக் டக்ளஸ் ஹியூமும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

மகாநாட்டை ஆதரித்து அதிபர் ஜோன்ஸன் அனுப்பிய செய்தியொன்றில், சமாதானம் நிலைக்கக்கூடியமுறையில் ஆக்கவேலைகளைச் செய்ய மகாநாடு வழிவகுக்கவேண்டுமென்றும் நல்லுலகம் ஒன்றை அமைப்பதற்கான நேரு-கென்னடி இலட்சியம் இப்பொழுது உயிர் பெற்றிருக்கிறதென்றும் அந்த இலட்சியம் ஈடேற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## தலைவர்கள் சந்தித்தனர்

கெய்ரோ, அக். 5

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோ, ஸிரியா தலைவர், ஈராக் அதிபர் ஆரிப், ஸைப்பிரஸ் அதிபர் ஆர்ச் பிஷப் மக்காரியோஸ், லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவர்ணபூமா, கமரூன் அதிபர் ஆகியோர் நேற்று கெய்ரே வந்துசேர்ந்தனர். அழைப்புகள் விடுக்கப்பட்ட பல நாடுகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் ஏற்கனவே இங்கு வந்துவிட்டனர். பல தலைவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

## 50 கோடி ரூபாவுக்கு கள்ளக்கணக்கு!

சென்னை, அக். 5

கடந்த மார்ச் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரையிலும் தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட திடீர் சோதனைகளில், 50 கோடி ரூபாவுக்கு கள்ளக்கணக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் அதிகப்படியாக ஒரு கோடி 40 லட்சம் ரூபா, வரி வருவாயாகக் கிடைத்தது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வருமானவரி அதிகாரிகள் இப்பொழுது தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் திடீர் சோதனை நடத்திவருகின்றார்கள்.

இந்தியா நினைத்தால்...

## அணுகுண்டை வெடிக்க 18 மாதங்கள் போதும்!

### அணுசக்தி கமிஷன் அதிபர் பிரிட்டனில் அறிவிப்பு

லண்டன், அக். 5

அணுகுண்டொன்றை வெடிக்க வேண்டும் என்று இந்தியா முடிவு செய்யுமானால் அதை பதினெட்டு மாதங்களில் செய்து முடிக்கும் என்று இந்திய அணுசக்தி கமிஷன் மா அதிபர் டாக்டர் பாபா தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் இப்பொழுது சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் டாக்டர் பாபா நேற்று பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டியில் தான் மேற்கண்டவாறு கூறினார்.

"அணுகுண்டைத் தயாரிக்கும் நோக்கமோ அல்லது அதை வெடிக்க வேண்டுமென்ற எண்ணமோ இந்தியாவுக்குக் கிடையாது. ஆனால் நினைத்தால் குறுகிய காலத்துக்குள் அதனைச் சாதிக்கும்திறமை இருக்கிறது" என்றும் டாக்டர் பாபா கூறினார்.

அணுகுண்டை வெடிக்கும் எண்ணம் இந்தியாவுக்கு இப்பொழுது இல்லை என்றும்அணுகுண்டை வெடிக்கவும் இந்தியா தற்பொழுது முடிவுசெய்யவில்லை என்றும் டாக்டர் பாபா கூறினார்.

## காடுமேடுகளில் ஓடும் கார்!

ஹாம்பாக், அக். 5

கரடுமுரடான நிலப் பகுதிகளிலும் வயல் வெளிகளிலும் ஓடக்கூடிய புது வகை மோட்டார் வாகனம் ஒன்று, பல நாடுகளின் கூட்டு முயற்சியால் தயாரிக்கப்பட்டுள்ளது.

'பார்மோபைல்' என்ற இந்த மோட்டார் வாகனத்தை, அமெரிக்க ஸ்தாபனமொன்று கிரீஸில் தயாரித்துள்ளது. முதல் வாகனம், ஸ்விட்சர்லாந்தில் விற்பனையானது.

இந்தக் கார் 1,110 ருத்தல் பாரத்தை ஏற்றிக் கொண்டு, மணிக்கு 60 மைல் வேகத்தில், மேடு பள்ளமான பாதைகளிலும் வரம்புகள் நிறைந்த வயல்களிலும் செல்லுகின்றது. இதில் 4 பேர் செல்லலாம். வாகனத்தைத் தயாரிக்க 1,600 டாலர் செலவானது.

## அரசாங்கதுருப்பில் அதிக சேதம்

ஸைகோன், அக். 5

ஸைகோனுக்கு அருகே தென் வியட்னாமுக்கும் வியட்காங் படைகளுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் அரசாங்க துருப்புகளுக்கு அதிக சேதம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க துருப்புகளில் 80 பேர் மாண்டனர் என்றும் 40 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## 41 பேர் பலி

வாஷிட்டன், அக். 6

தெற்கு அமெரிக்காவில் ஒரு பகுதியில் வீசிய புயலினால் இதுவரை 41 பேர் மாண்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது. இந்தப் பகுதியை 'அழிவுப்பகுதி' என்று அதிபர் ஜோன்ஸன் பிரகடனப்படுத்தியுள்ளார்.

## வெளிநாடுகளில் காந்தி ஜயந்தி

லண்டன், அக். 5

காந்தி ஜயந்தி லண்டன், அமெரிக்கா, ரஷ்யா உட்பட பல நாடுகளில் கொண்டாடப்பட்டது.

## 20,000 புதிய தபால்நிலையங்கள்

புதுடில்லி, அக். 5

நாடெங்கும் விரைவில் 20,000 புதிய தபால் நிலையங்கள் திறக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாஷிங்டனில் மக்கபகால்

வாஷிங்டன், அக். 5

அமெரிக்காவில் மூன்று நாள் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு, பிலிப்பைன்ஸ் அதிபர் மக்கபகால் நேற்று வாஷிங்டன் வந்துசேர்ந்தார்.

## பாராட்டு

கொழும்பு, திங்கள்

கொழும்பு இந்துவாலிபர் சங்கத்தின் புதிய தலைவராக உடுப்பிட்டி எம். பி. திரு மு. சிவசிதம்பரம் தெரிவுசெய்யப்பட்டிருப்பது குறித்து அகில இலங்கை அருந்ததியர் சங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளதுடன் இந்து சமயத்திலுள்ள பேதங்களை அகற்றி ஒற்றுமையான சமுதாயத்தை உருவாக்க முயற்சிக்கவேண்டுமெனவும் திரு. சிவசிதம்பரத்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுன்னாகத்திற்கு இரண்டுதட்டு பஸ்

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று முன்தினம் மாலை சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே முதல் முதலாக இரண்டு தட்டு பஸ் சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டது. லங்கா சமசமாஜக் கட்சிச் செயலாளர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இதை ஆரம்பித்துவைத்தார்.

கூட்டரசாங்கம் பதவியேற்ற பின்னர்தான் நாட்டிலே சீரழிந்துகொண்டு போன பஸ் சேவை ஓரளவு நிவிர்த்தி செய்யப்பட்டிருக்கிறதென்றும், யாழ்ப்பாணத்திலே இரண்டு தட்டு பஸ் சேவையை முதல் முதலாக ஆரம்பித்துவைத்தது லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த ஒருவர்போக்குவரத்து மந்திரியாகக் கூட்டரசாங்கத்தில் அங்கம்வகித்த பின்னர்தான் என்றும் இன்று ஆரம்பித்துவைக்கப்பட்டபஸ்கடைசி பஸ் அல்ல, இன்னும் பல இரண்டுதட்டு பஸ்கள் யாழ்ப்பாணத்திற்கு வரவிருக்கின்றனவென்றும் இரண்டுதட்டு பஸ் சேவையை ஆரம்பித்துவைத்து சுன்னாகம் பஸ் நிலையத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசியபோது குறிப்பிட்டார்.

## 10,000 ரூபா பிணையில் கார்

பருத்தித்துறை, திங்கள்

நெல்லியடியைச் சேர்ந்த முருகேசு இளையதம்பி என்பவர் மீது சட்டவிரோதமாக 59 போத்தல் சாராயம் வைத்திருந்ததாயும் அதைக் கடத்திச் சென்றதாயும் வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கில் சாராயத்தைப் பறிமுதல் செய்ததுடன் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் ரூபா 500 அபராதம் விதித்து மாஜிஸ்திரேட் தீர்ப்பு வழங்கினார்.

சாராயம் கொண்டு சென்ற கார் சம்பந்தமாகப் பொலிசாரது கோரிக்கைப்படி பறிமுதல் செய்வதை எதிரி தரப்பினர் ஆட்சேபித்ததைத் தொடர்ந்து காரை ரூபா 10,000 பிணையில் செல்ல அனுமதித்து இம்மாதம் 16-ம் திகதி ஆஜராகும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

## "புரட்சி அவசியம்"

உடுப்பிட்டி, திங்கள்

"புரட்சி ஒரு நாட்டின் கலாச்சார மாற்றத்திற்கும், முன்னேற்றத்திற்கும் உறுதுணையானது. சீனாவில் சிறுபான்மை இனத்தவர்களுக்கென தனிப்பட்ட சுயாட்சிப் பிராந்தியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கையிலும் சிறுபான்மை இனமாக தமிழர்கள் சுயாட்சிப் பிரதேச ஆட்சியமைப்பைப்பெற்று வாழ புரட்சி அரசாங்கம் அவசியம்."

இவ்வாறு யாழ். பிரதேசக் கம்யூனிஸ்டகட்சித் தலைவர் திரு. திரு. வீ. ஏ. கந்தசாமி சீனமக்கள் குடியரசின் 15-வது சுதந்திரதினம் நெல்லியடி கம்யூனிஸ்ட் வாலிப சங்கத்தினரால் கொண்டாடப்பட்ட போது பேசுகையில் கூறினார்.

திரு. மா. சிவபாதம் தலைமை வகித்தார்.

## "பால்சபைக்கு ரூ.200,000 நட்டம்"

கொழும்பு, திங்கள்

அண்மையில் நடைபெற்ற வேலைநிறுத்தம் காரணமாகப் பால் சபைக்கு சுமார் 200,000 ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது.

பால் சபை உத்தியோகஸ்தர்கள் யூனியனின் காரியதரிசி திரு. கே. டி. நிமலதாசா இந்த விபரத்தைத் தெரிவித்துள்ளார்.



# மாணவர் மலர்



# ரஷ்ய அனுபவங்கள்

— எஸ். யோகரத்தினம் —

ரஷ்யாவின் தலைநகரமான மாஸ்கோவில் உள்ள பல்கலைக்கழகமொன்றில் கல்வி பயிலும் இந்த மாணவர், ரஷ்யா பற்றியும் தமது அனுபவங்கள் குறித்தும் இங்கு வெளியிடுகிறார். பலருக்கும் இது பயன்பெறும் என்பதில் சந்தேகமில்லை.

உலகத்தின் பரப்பிலே ஆறில் ஒரு பங்கைத் தன்னகமாகக் கொண்டுள்ள சோவியத் யூனியன் உலகிலேயே மிகப் பெரிய தேசமாக விளங்குகிறது. சுமார் 150 தேசிய இனத்தைக் கொண்ட சோவியத் யூனியனின் சனத்தொகை 22 கோடியாகும். சோவியத் யூனியன் கிழக்கு எல்லைக்கும் மேற்கு எல்லைக்கும் உள்ள நேர வித்தியாசம் 14 மணித்தியாலமாகும். சோவியத்யூனியன் பல குடியரசுகளாகவும், குடியரசுகள் பல பிரதேச சுயாட்சியாகவும் அமைந்திருக்கின்றன.

## மொழிப்பிரச்னை

சுமார் 800 க்கு மேற்பட்ட மொழிகளையுடைய சோவியத் யூனியனில் மொழிப பிரச்னை எவ்விதம் தீர்க்கப்பட்டுள்ளது என்பதை அறிய நீங்கள் ஆவல்படலாம். மொழி அங்கு ஒரு பிரச்னையாயில்லை. ஆனால் மிகவும் சுலபமாக மொழிப்பிரச்னை தீர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடியரசிலும் அந்தக் குடியரசிலுள்ள மக்கள்பேசும் மொழியிலேயே நிர்வாகம் நடைபெறுகின்றது. அதே நேரத்தில் மத்திய அரசாங்கத்தின் உத்தியோக மொழியான ருஷ்ய மொழியிலும் அலுவல்களைச் செய்யலாம். உத்தியோகம் பார்ப்பதற்குக் கட்டாயமாக ருஷ்யமொழியைப் படிக்க வேண்டுமென்ற கட்டாய நிபந்தனை அங்கேயில்லை. ஆனால் ஒவ்வொரு சோவியத் பிரஜையும் ருஷ்ய மொழியை விரும்பப் படிக்கின்றார்கள்.


சோவியத் யூனியனைப் பற்றியும், சோவியத் மக்களின் வெற்றிகரமான செயல்களைப் பற்றியும் வருடக்கணக்கில் பேசிக்கொண்டே போகலாம். இரண்டாவது உலக யுத்தம் சோவியத் யூனியனைத் தரைமட்டமாக்கியதைப்பற்றி நான் கூருமலேயே நீங்கள் அறிவீர்கள். சோவியத் பொருளாதார விருத்தியை 20 வருடம் பின் தள்ளிவைத்தது. இந்த நிலையிலும்கூட சோவியத் மக்களின் அயராத கடும் உழைப்பும் தேசபக்தியும் அவர்களை இன்று உலக அரங்கிலே பொருளாதார நிலையிலோ அல்லது பாதுகாப்பு நிலையிலோ எந்த வல்லரசுக்கும் சவால்விடுக்கக்கூடிய நிலைக்கு உயர்த்தியுள்ளது. வள்ளுவன் கூறிய, "முயற்சி தன் மெய் வருந்தக் கூலிதரும்" என்பதை இங்கே செயல் முறையிலே காண்கிறோம்.

## கல்வி முறை

மக்கள் எப்பொழுதும் தனிப்பட்ட முறையில் சிந்திக்காது நாட்டின் அடிப்படையிலேயே சிந்திக்கிறார்கள். "தாய்நாடு அன்றேல் மரணம்" என்பதே அவர்களது சுலோகம், இந்தச் சக்தியே அவர்களை முன்னேக்கிச் செல்ல வைக்கின்றது.

எங்கள் நாட்டில் நடைமுறையிலிருக்கும் ஆங்கிலேயரைப் பின்பற்றிய கல்வி முறைத் திட்டத்திற்கு முழுதும் வேறுபட்ட ஒரு கல்வித் திட்டத்தை இங்கே காண்கிறோம் அங்குள்ள கல்வி முறை உத்தியோகம் பெறும் ஒரு நோக்கத்தையே கொண்டதாக இல்லாமல் மக்களைக் கற்றோர்களாக ஆக்கும் குறிக்கோளைக் கொண்டதாக அமைந்துள்ளது. தேர்வு அதாவது பரீட்சை, உத்தியோகம் கேட்கும் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் களமாக இல்லாமல் மாணவர்களின் உண்மையான அறிவைச் சோதிக்கும் இடமாக இருக்கின்றது.

(தொடரும்)



சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் முன்னோடி திட்டத்தின் ஒரு கட்டம். மனிதர்களில்லாத "அப்போலோ" விண்வெளிக்கப்பல் பூமியிலிருந்து அனுப்பப்படுவதை படத்தில் காண்க. 1970-ல் சந்திரனை எப்படியும் தரிசித்து விடுவோம் என்று சங்கற்பம் கட்டி இப்படியான பரீட்சைத்திட்டங்களில் இறங்கியிருக்கிறார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள்.

சிரிக்க ஒரு கதை

# மொழி நாடகம்

விஜயனும் ராஜனும் இணைபிரியாத நண்பர்கள். அவர்களுக்கு மற்றைய நண்பர்கள் நல்ல மதிப்பும் மரியாதையும் அளித்தனர். அவர்கள் வருவதைக் கண்டாலே போதும்; மற்றைய நண்பர்கள் ஒருவிதமாக கூச்சப்படுவார்கள்! இவை எல்லாவற்றுக்கும் காரணம்...

அவர்கள் பலசாலிகளல்ல. பணக்காரர்களல்ல அழகானவர்களுமல்ல. ஆனால் அவர்களிடம் ஒரு விசேஷம் இருந்தது. மற்றைய நண்பர்களுக்குப் புரியாத ஆனால் ஓரளவு தெரிந்த மொழிவிஷயம், விஜயனிடமும் ராஜனிடமும் குடிகொண்டிருந்தது!

நண்பர்களிடம் கதைத்துக்கொண்டிருக்கும்பொழுது சந்தர்ப்பம் கிடைக்கும் சமயத்தில் ராஜனும் விஜயனும் வேறு மொழியில் பேச ஆரம்பித்துவிடுவார்கள். அவர்களிருவரும் பேசுவது மற்றவர்களுக்குப் புரியாது, இதனால் மற்றைய நண்பர்கள் விஷயம் தெரியாது விழிப்பார்கள். தங்களைப்பற்றித்தான் ஏதோ பேசுகிறார்கள் என்றும் ஏதோ திட்டம் வகுக்கிறார்கள் என்றும் அவர்கள் எண்ணுவார்கள்.

∴ ∴ ∴

அன்று சனிக்கிழமை. மாலை ஐந்திருக்கும். ராஜனும் விஜயனும் வேறு இரு நண்பர்களும்

(5-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

விளையாட்டு மைதானத்தில் அளவளாவிக்கொண்டிருந்தனர். சில நிமிடங்கள் மறைந்திருக்கும். ஐந்து நண்பர்கள் இவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தனர். அருகில் அவர்கள் வரவே, அந்த நண்பர்களில் ஒருவர் புதியவராகக் காணப்பட்டார்.

"இவர் பெயர் சிவநேசன், இவர் இந்தியாவில் பல்கலைக்கழகமொன்றில் படிக்கிறார்" என்று ராஜனுக்கும் விஜயனுக்கும், வந்த நண்பர்கள் அறிமுகம் செய்துவைத்தனர். அறிமுகப்படலம் முடிந்து நண்பர்களிடையே பேச்சுக்கள் ஆரம்பித்தன. வழக்கம்போல் ராஜனும் விஜயனும் வேறு மொழியில் கதைத்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது......

எதிர்பாராதவகையில் சிவநேசன்...... "அந்தப் படங்கள் எல்லாம் நான் பார்த்திருக்கின்றேன்......" என்று கூறினான். மற்ற நண்பர்கள் விஷயம் தெரியாது விழித்தனர். "என்ன சொல்கிறீர்கள் சிவா. இவர்கள் என்ன பேசினார்கள்!" என்று கேட்டான் சிவநேசனின் நெருங்கிய நண்பன். இந்தக் கட்டத்தில் ராஜனும் விஜயனும் வேற்று மொழியில் தொடர்ந்து பேசினார்கள். சிவநேசனும் அதே மொழியில் சில கேள்விகள் கேட்டான். ராஜனின் முகத்திலும் விஜயனின் முகத்திலும் ஏதோ மாறுதல் ஏற்படுவதை மற்ற நண்பர்கள் கண்டு திண்டாடினர்.

"என்ன நீங்கள் படங்களின் பெயர்களைச்சொல்லிக்கொண்டு போகிறீர்கள். எனது கேள்விக்கு ஏன் பதிலளிக்கவில்லை" என்று தமிழில் கேட்டான் சிவநேசன்.

கைக்கடிகாரத்தைப் பார்த்த விஜயன்...... "பார்த்தியா ராஜன்... எவ்வளவு நேரமாகிவிட்டதென்று......" என்று கூறிக்கொண்டு புதிய நண்பனிடம் விடை பெருமலே "அவசரம் வாரோம்" என்று சொல்லிக்கொண்டு அவ்விடத்தை விட்டகன்றுவிட்டார்கள் ராஜனும் விஜயனும்.

"என்ன நடந்தது" என்று சிலர் சிவநேசனை வினவினர். "அவர்கள் கதைத்ததற்கு, ஏன் படம் படம் என்று சொன்னீர்கள்? அவர்கள் பேசியது என்ன!" என்று கேட்டனர்.

"பின்ன என்ன! அவர்களிருவரும் ஹிந்திப் படங்களின் பெயர்களை அடுக்கிக்கொண்டே சொன்னார்கள். அதுதான் அப்படிக் கேட்டேன்" என்றான் சிவநேசன்.

ஹிந்தி மொழி தெரியும் என்று கூறி, ஹிந்திப் படங்களின் பெயர்களை நினைவில் வைத்துக்கொண்டு புழுகியடித்த ராஜன்—விஜயன் மொழி நாடக இரகசியம், இப்பொழுதுதான் மற்றைய நண்பர்களுக்கு விளங்கியது — அம்பலமானது!

— [illegible]

# மூளைக்கு வேலை

கடைசியாக வெளியான போட்டியின் விடைகள் வருமாறு: முதலில் இடமிருந்து வலமான விடைகள்: முதல் வரிசை: இடுக்கண். இரண்டாம் வரிசை: ராகு. மூன்றும் வரிசை: வமிசம். நான்காம் வரிசை: குடம். ஐந்தாம் வரிசை: சன்னி. (மேலிருந்து கீழ்விடைகள்): முதல் வரிசை: இராவணன். இரண்டாம் வரிசை: குடுமி. மூன்றும் வரிசை:சகுனி. நான்காம் வரிசை: கண்டம். ஐந்தாவது வரிசை: கம்பு. இதில் முதலிரு சொற்கள் மட்டுமே எழுதப்பட்டிருக்க வேண்டும்.

சரி இனி, முழுறும் சரியாக விடையெழுதியவர்களின் பெயர்களைக்கவனிப்போம்.

ம. நாகேந்திரன், மானிப்பாய்; சத்தியேஸ்வரி கனகசபை, மானிப்பாய் கிழக்கு; க. பாலராமன், யாழ்ப்பாணம்; து. சண்முகராசா, கந்தர்மடம்: சீ. அம்பலவாணர், குப்பிளான்; ஈஸ்வரி, மூளாய்; வை. ச. ஆனந்தன், திண்ணபுரம்; க. இராமசாமி, யாழ்ப்பாணம்; சுபத்திரா இளையதம்பி; சி. பல்குணன் லாலா, உடுவில்கிழக்கு; ஆ. கா. சிறீதரன், கொல்லங்கலட்டி; செ. திருவேல், தெல்லிப்பழை; செ. சண்முகலிங்கம், சங்கானை; இராசேஸ்வரி பசுபதி, சாவகச்சேரி. நா. பூபாலசிங்கம், நீர்வேலி; ம. சேவியர் கருணாரத்தினம், கரவெட்டி; கா. பீதாம்பரம், அரியாலை மேற்கு; சி மகாலிங்கம், அளவெட்டி தெற்கு; ச. சிவானந்தசோதி, வடலியடைப்பு; க சொர்ணம்பிகை, கரைநகர்; ஏ. கே. ஹரன், காரைநகர்; ஐயன்னு முருகையா, சூராவத்தை; சி. சுந்தரலிங்கம், தையிட்டி; சி. சாந்தலிங்கம், காங்கேசன்துறை; த. மகேஸ்வரி, புங்குடுதீவு; தில்லையீஸ்வரி முத்தையா, அளவெட்டிவடக்கு; பொ. மல்லிகாதேவி, உருத்திரபுரம்; செ. அநுசூயா, கொக்குவில்; க. சுபத்திரா, வீமன்காமம்; க. குண. தெல்லிப்பழை; சி. வெற்றிவேலு, மாவிட்டபுரம்; சி. பொன்னம்பலம், கிளாலி; க. சாந்தாதேவி, ஐயனார் கோவிலடி; பொ. சிறீதரன் கன்பொல்லை; எல். எஸ் நல்லதம்பி, வெளாந்தெரு; த. சிவகுமார், கன்னுகம்; ஏ. கே. ஞானலிங்கம், சரசாலை; பொன். குணரத்தினம், திருநெல்வேலி; ச. சிறீரங்கன், யாழ்ப்பாணம்; எஸ். அருந்ததி, யாழ்ப்பாணம்; அ. கனகசூரியர், ஊரெழு மேற்கு; கே ரவீந்திரன், வண்ணார் பண்ணை

ஒரு பிழையுடன் சரியான விடையனுப்பியவர்களின் பெயர்கள் வருமாறு:

சி. சந்திரலோஜினி, கோண்டாவில் மேற்கு; க. சிவப்பிரகாசம், காங்கேசன் துறை; நா. சண்முகலிங்கம், மயிலிட்டி; க. விக்னேஸ்வரலிங்கம், இமையாணன்; த. ரவீந்திரலிங்கம். உடுப்பிட்டி; ஆர். பீ. சர்வேஸ்வரன், யாழ்ப்பாணம்; இ. சந்திரவதன, உடுப்பிட்டி; க. ஜெயந்தி, கரவெட்டி; இ. சங்கரலிங்கம், கரணவாய் வடக்கு; சி. குலேந்திரன், கரம்பொன், மேற்கு; ஆ. செல்வநாயகி உரும்பராய்; க. கணேசலிங்கம், வண்ணார்பண்ணை; பொ. கணேசமூர்த்தி, காங்கேசன் துறை; சி. ஸ்ரீகணேசன், கோண்டாவில்; கே. ஸ்ரீரங்கன், நீராவியடி; ஐ. சசிகலதேவி, காங்கேசன் துறை; சாந்தா, யாழ்ப்பாணம்; த. மகேந்திரன், திருக்கோணமலை; ரேணுகா அம்பலவாணர், கல்வளை; சபா. புஷ்பநாதன், சுன்னாகம்; ஆர். பி. ஹரன், கோப்பாய் தெற்கு; செல்வராணி கனகசபாபதி, திருநெல்வேலிவடக்கு; இ. ஜெகநாதன், யாழ்ப்பாணம்; க. சிவராசா, கொட்டடி; தா. வாசுதேவன். காரைநகர்; சி. நவநீதன், சி. வரதாதேவி, பொ. சத்தியலட்சுமி, பொ. புவனேஸ்வரி, கு. அம்பிகா, காங்கேசன் துறை; எம். தஸ்லீம், யாழ்ப்பாணம்; ப. சிவலிங்கம், எஸ். நாகேஸ்வரி, காரைநகர்.

இரண்டு பிழைகளுடனும் அதற்கு மேலான பிழைகளுடனும் விடைகள் அனுப்பியவர்களின் பெயர்கள் இங்கு இடம்பெருமைக்கு வருந்துகின்றேன். அதிகமானர்கள் கலந்துகொள்வதால் எல்லோருடைய பெயர்களையும் வெளியிடுவது கஷ்டம்தானே? சரி... இனி கேள்வி மண்டலத்துக்குள் நுழைவோமா......? இம்முறை மட்டும் ஒரு மாற்றம். ஆனால் அடுத்தமுறை போட்டி மீண்டும் குறுக்கெழுத்தாகவிருக்கும்.

## கேள்விமண்டலம்

மண்டல சார்பற்ற (நடுநிலைமை) நாடுகளின் மகாநாடு, இப்பொழுது ஐக்கிய அரபு குடியரசின் தலைநகரான கெய்ரோவில் நடைபெறுகிறது நீங்கள் எல்லோரும் தெரிந்ததே. ஆனால் முதலாவது மண்டலசார்பற்ற மகாநாடு (இப்பொழுது நடைபெறுவது இரண்டாவது மகாநாடு) எங்கு நடைபெற்றது என்பதை, அதாவது எந்த நாட்டில் நடைபெற்றது என்பதை உங்களால் சொல்ல முடியுமா? முதலாவது மண்டல சார்பற்ற நாடுகள் மகாநாடு எந்த வருடத்தில் நடைபெற்றது என்பதையும் கூறினால் நீங்கள் உண்மையிலேயே 'கெட்டிக்காரர்கள் தான். ஆனால் எந்த நாடு என்பதை மட்டும் சொன்னாலும் போதும். சரியான விடையை எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னதாக, மாணவர் மலர் 'ஈழநாடு', த. பெ. இ. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். விடையை தபாலட்டையில் எழுதினால் போதும்.

—சாந்தா

## இராமநாதன் இல்லம் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்வாய். பலாலி ஆசிரிய கலாசாலையின் இல்லங்களுக்கிடையேயான கூடைப் பந்தாட்டப் போட்டி சென்றவாரம் நடைபெற்றது. பொன்னையா இல்லத்துக்கும் இரத்தினம் இல்லத்துக்குமிடையே நடைபெற்ற போட்டியில் பொன்னையா இல்லம் வெற்றிபெற்றது. இரத்தினம் இல்லத்துக்கும், இராமநாதன் இல்லத்துக்கும் இடையே நடைபெறவிருந்த போட்டி விளையாடாமலே இராமநாதன் இல்லத்துக்கு வெற்றி கிடைத்தது. இதன்பின்னர் இராமநாதன் இல்லத்துக்கும், பொன்னையா இல்லத்துக்குமிடையே நடைபெற்ற போட்டி மிகவும் மெச்சத்தக்கதாயிருந்தது. இப் போட்டியே சாம்பியன் போட்டியாக இருந்ததினால் அனேக பார்வையாளர்கள் சமூகமளித்தனர். இரு கோஷ்டிகளும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடாமல் திறமையாக விளையாடினர். இடைவேளைக்கு சற்று முன் பொன்னையா இல்லம் கமாலுடீனின் திறமையினால் 4 புள்ளிகளைப் பெற்றது இதைத் தொடர்ந்து இராமநாதன் இல்லத்தலைவர் நயாவின் சாமர்த்தியத்தினால் புள்ளிகளை சமமாக்கினர். இடைவேளையின்பின் இராமநாதன் இல்லம் உற்சாகத்துடன் விளையாடி 16 புள்ளிகளைப்பெற்றது. விளையாட்டு முடிவுறும் வேளையில் பொன்னையா இல்லம் 10 புள்ளிகளைப் பெற்றது. பொன்னையா இல்லத்தின்சார்பில் கமால்டீன், சௌந்தரராசா ஆகியோர் திறமையாக விளையாடினர். திருவாளர்கள் ஏ. சுப்பிரமணியம், எம். ஏ. ஹசன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.


REGAL — JAFFNA
NOW SHOWING
Loves of the World!
I LOVE YOULOVE
(Technicolor-Ultrascope)


## நாய்கள் அணிவகுப்பு

சென்னை, அக். 5

இன்று பொலிஸ் துப்பறியும் நாய்களின் அணிவகுப்பில் 8 நாய்கள் கலந்து கொண்டன. இவற்றில் 3 குட்டி நாய்களும் இருந்தன. குட்டி நாய்களுக்கு இப்போது பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. குற்றத்தைத் துப்பு துலக்குவது மட்டுமன்றி, கள்ளக்கடத்தலை துப்பறியவும் இவைகள் பழக்கப்படுகின்றன. ——

## புதிய இலாகா

கொழும்பு, திங்கள்

உள்ளூராட்சிசபைத் தலைவர்களின் நடத்தை குறித்து விசாரணை நடத்த உள்ளூராட்சி சேவைக் கமிஷனின் கீழ் இதற்கென புதிய இலாகா ஒன்று நிறுவப்படும். இது உள்ளூராட்சித் தலைவர்களின் நடத்தை குறித்தும் அவர்கள் மேல் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் குறித்தும் இந்த இலாகா விசாரணை நடத்தி கமிஷனருக்கு தெரியப்படுத்தும். அதன் அடிப்படையில் தலைவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். ——

## பாடசாலைக் கட்டங்கள் திறந்துவைக்கப்பட்டன

உடுப்பிட்டி, திங்கள்

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் புதிதாகக் கட்டப்பட்ட இரு கட்டடங்களை அதிபர் திரு. எஸ். எஸ். செல்லத்துரை குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்தார்.


7வது வெற்றி வாரம்!
ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன்: 485
தினசரி 6-30 9-30க்கு மட்டும்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
பாலசர்மா ● அசோகன்
டி. கே. பகவதி ● நரசிம்மபாரதி
ஜெயஸ்ரீ ● விஜயலக்ஷ்மி
மற்றும் பலர் நடித்த
சம்பூர்ண
மகாபாரதம்



மங்களகரமான 2வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
குயின்லன் (நுகேகொடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)
வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)



எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி
மற்றும் பலர் நடிக்கும்
பணக்கார குடும்பம்


## திரைப்பட அதிகாரிகள் வேலைநீக்கம்

கொழும்பு, திங்கள்

அரசாங்க திரைப்பட யூனிட்டைச் சேர்ந்த இரு உத்தியோகஸ்தர்கள் நேற்று தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட முறையில் படம் பிடித்துக் கொண்டிருக்கையில், திடீர்ப் பரிசோதகர்களிடம் இவர்கள் அகப்பட்டனர் என்றும் இதனைத் தொடர்ந்தே இவர்களைமீது தற்காலிக வேலைநீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென்றும் தெரியவருகிறது.

——

## சாராயம் விற்றோருக்கு அபராதம்

பருத்தித்துறை, திங்கள்

சட்டவிரோதமாக சாராயம் விற்றதாக பருத்தித்துறைக் கலால் இலாகாவினரால் கரணவாய் தெற்கைச் சேர்ந்த வ. ஆறுமுகம், கரவெட்டி மேற்கைச் சேர்ந்த வி. நடராசா, கரவெட்டி வடக்கைச் சேர்ந்த ஏ சண்முகவடிவேலு, துன்னாலை தெற்கைச் சேர்ந்த வி. ஆறுமுகம ஆகியோர் மீது குற்றம் சாட்டித் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளில் பருத்தித்துறை நீதிபதி திரு ஜெபேட் சில்வா ஒவ்வொருவருக்கும் ரூபா 70 வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்புவழங்கினர்.

——

## இசையாளர் சங்க அங்கத்தவர் ராஜினமா

நல்லூர், திங்கள்

மாவிட்டபுரம் இசையாளர் மடபரிபாலன சபை உறுப்பினர் பதவியிலிருந்து யாழ் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் ராஜினமாச் செய்துள்ளார்.

——

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

### செவ்வாய் 6-10-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 ஸ்ரீலங்கா குறுக்கெழுத்துப் போட்டி, 7-00 விவேகச் சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம, 9-45 நாதஸ்வரம்—வி. கோதண்டபாணி.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 சக்திப் பாடல்கள், 7-45 ரேடியோ செய்தி மலர்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 பாட்டு—எஸ். ஆர். குப்புஸ்வாமி, 2-40 பொன்னெளிர் பாரதம் தொடர் நிகழ்ச்சி.

மாலை 5-15 பாட்டு—எஸ் ஆர். குப்புஸ்வாமி, 5-45 இசைப் பயிற்சி.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சி, 7-30 நாடகம்—புத்தாறு விலாஸ், 7-45 நாதஸ்வரம்—9-15 மெல்லிசை, 9-30 முன்னேற்றப்பாதை— சித்திரம், 9-45 இலக்கிய ஏடு சந்திய சோதனை உரைக்கோவை.

## 'எதிரியின் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**குறுக்கு விசாரணை**

எதிரியின் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் டாக்டரைக் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: இறந்தவர் வெள்ளை வேட்டியும் மஞ்சள் சேட்டும் அணிந்திருந்தார்?-ஆம்.

வழ: இறந்தவர் 5 அடி 6 அங்குலம் உயரமிருக்கும்?-ஆம்.

வழ: இப்படியான கற்களை கடற்கரையில் காணலாம்? -ஆம்.

**தாயார் சாட்சியம்**

காலஞ்சென்றவரின் தாயாரான வைரமுத்து நாகம்மா சாட்சியமளித்தபோது கூறியதாவது:

எனது மகனின் சடலத்தை அடையாளம் காட்டினேன். எனது மகன் என்னுடன் வாழ்ந்து வந்தார். எதிரியை எனக்குத்தெரியும். சம்பவம் நடந்ததினம் மாலை 6 மணிக்கு சூரசங்காரம் வீட்டிலிருந்தார், அப்பொழுது எதிரி ராஜசேகரம் வந்து மகனைக் கூப்பிட்டார். அவரின் தம்பி குட்டிராசாவும், மச்சான் கனகரத்தினமும், ஒன்றைவிட்டதமயன் சந்திரசேகரமும் வந்திருந்தார்கள். வீட்டிற்குள் வந்து கூப்பிட்டார்கள். எதிரி "சூரசங்காரம்" என்று கூப்பிட்டார். சூரசங்காரம் வெளியில் வந்து எதிரியுடன் கதைத்தார். பின் வீட்டிற்குள் வந்து சட்டை போட்டுக்கொண்டு வெளியே சென்றார்.

**படத்திற்குப்போனர்**

'படத்திற்குப் போவதற்கு காசு தா' என்று எனதுமகன் கேட்டார். நான் காசு இல்லாதபடியால் இல்லையென்று சொன்னேன். படத்திற்குப் போக நேரம் போய்விட்டது போகவேண்டாம் என்றேன் அவர் இரண்டாம் காட்சிக்கு போவதாகக் கூறிவிட்டுப்போனர். அப்பொழுது இரவாகி விட்டது.

**மனைவியின் பெயர் குயிலாம்பிகை**

வழ: உமது மகன் கலியாணம் முடித்துவிட்டாரா?-ஆம்.

வழ: மனைவியின் பெயர் என்ன?-குயிலாம்பிகை.

வழ: உமது மருமகள் முன்பு சொந்தமா? - ஆம், மச்சான் முறை.

வழ: பிள்ளைகள் இருக்கிறதா? - ஆம். ஆண் குழந்தை ஒன்று.

வழ: குழந்தையின் வயது என்ன? - இப்போது 3 1/2 வயது.

வழ: சம்பவம் நடந்த நாளில் மகன் பெண்சாதியுடன் ஒன்ருக இருந்தாரா? - இல்லை.

வழ: பிரிந்திருந்தார்கள்? - சம்பவம் நடப்பதற்கு 2 கிழமைக்கு முன் மாமியாருடன் திருப்தியில்லாமலிருந்தார்?

நீதி: கணவன் மனைவி பிரிந்திருந்தார்களா? - ஆம்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டால் நம் வியாதிகளில் பல குணமாவதைப் பார்க்கின்றோம். மாதத்தில் இரு நாட்கள் நாமாகப் பட்டினி கிடந்தால் நோயோ வராமலும் தடுத்துக்கொள்ளலாமென்றே 'ஏகாதசி உபவாசம்' ஏற்படுத்தியுள்ளனர். 'சாஸ்திராயசுகாயச' சாஸ்திரயெல்லாம் நம் சுகத்துக்காகத்தான். ஆனல் இக்காலத்தில் நம்மில் யார் சாஸ்திரத்தை லட்சியம் செய்கிருர்கள்? நோய்களும் வரவரப் பெருகுவதில் என்ன வியப்பு?

ஈசனருளிச்சையறி விபற்றவின்ப மிலய மொருபோகமதிகாரமாகித், தேடருவ மருவுருவ முருவமாகித் தேவியுமாய்த் தேசமொடு செல்வமாகிப், பேசரிய வுயிரையெலாம் பெற்று நோக்கிப் பெரும்போக மவையளித்துப் பிறப்பினையு மொழித்திட்டு, ஆசகலு மடியருளத் தப்பனுடனிருக்கு மன்னையருட் பாதமலர் சென்னிவைப்பாம்.

—சிவஞானசித்தியார் சுபக்கம்

## அறிவித்தல்

ஆரிய திராவிடப் பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தும் தமிழ் பிரவேச, பாலபண்டித, பண்டித பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் வகுப்பு தென்மராட்சித் தலைமையாசிரியர் சங்கத்தினுதரவில் சாவகச்சேரி டிறிபேக் ஆங்கில வித்தியாசாலையில் சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும். அதில் சேர்ந்து படிக்கவிரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் 28-10-64-க்கு முன் பண்டிதர் க. தம்பாபிள்ளை காரியதரிசி, அமிர்தாம்பிகை வித்தியாசாலை, நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி என்ற விலாசத்திற்கு மனுச்செய்து கொள்ளவும். ஆரம்ப வகுப்பு 7-11-64-ல் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். மாதிரி விண்ணப்பப்படிவங்களை 15-10-64க்குப்பின் காரியதரிசியிடம் 1 ரூபா அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்
பண்டிதர் க. தம்பாபிள்ளை,
காரியதரிசி.

நுணுவில் கிழக்கு,
2-10-64. 955

## வரி விளம்பரம்

அனுபவம் வாய்ந்த சீன நிபுணரால் இயற்கை அமைப்புக்கேற்ப பற்களைக் கட்டுவதற்கு உகந்த இடம் யாழ்ப்பாணத்தில் இது ஒன்றே. கண் பார்வை பரிசோதனை செய்தும், டாக்டரினால் சிபார்சு செய்த கண்ணாடிகள் அழகிய பிரேம்களில் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம் எஸ். எம். பெர்னண்டோ, பிரதான வீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தி. யாழ்ப்பாணம். 895

### தேவை

புத்தக விற்பனையில் அனுபவமும், ஆங்கில அறிவும். சுறுசுறுப்பும், நேர்மையும், தகுந்த பிணை கட்டக் கூடியவருமான விற்பனையாளர் ஒருவர் தேவை, அருணா புத்தக நிலையம், 61, பெரியகடை, யாழ்ப்பாணம். 1011

### விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் B.S.A 350 c c E Y 9747 நல்ல நிலையிலுள்ளது. நியாயமான விலைக்குக் கொடுக்கப்படும். விலாசம்: ஈஸ்வரன், தம்பி கராச்சடி, காங்கேசன்துறை வீதி, கோண்டாவில். 1006

### வீடு வளவு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை தெல்லிப்பளை ரோட்டில் ஆறு அறை கொண்ட வீடு யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து இருநூறு யார் தூரம், காலேமுக்கால் பரப்பு வாடகை ரூபா 125/- விபரங்களுக்கு: 233 ஹவ்லொக் ரோட் வீதி, கொழும்பு-12. 1008

### தொய்வு, நீரிழிவு

குணபபடுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலைக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணசுந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

## ஆமை இறக்குமதி செய்தோருக்கு அபராதம்

மாவிட்டபுரம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு ஆமை வியாபாரிகள் இறக்குமதி கட்டுப்பாட்டு அதிகாரியின் அனுமதியின்றி சுமார் ரூபா 20,000 பெறுமதியான ஆமைகளை இறக்கியதை தொடர்ந்து கொழும்பு பிரதம சுங்க கலக்டர் இறக்குமதி செய்த ஆமையின் மொத்தப்பெறுமதியில் 10% அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

# எதிரியின் மனைவியும் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வழ: பிரிந்திருப்பதற்குமுன் உமது வீட்டிலா இருந்தார்கள்? - என் வீட்டிலும் மாமியார் வீட்டிலும் இருப்பார்கள்.

வழ: எதிரியை எவ்வளவு கலமாகத் தெரியும்? - நெடுகத் தெரியும்.

நீதி: கேட்ட கேள்விக்கு மட்டும் மறுமொழிசொல்லும். அதிகம் பேசாதே. வழக்கைப் பாழாக்கிவிடாதீர்.

வழ: எதிரியின் மனைவியைத் தெரியுமா? - ஆம். ஒன்றரை வருடமாகத்தெரியும்.

பெயரென்ன? - தெரியாது. பழம் என்று அழைப்பார்கள்.

நீதி: சாதாரண பழமா? அல்லது மாம்பழம் பலாப் பழம் என்றுஅழைப்பார்களா? -அம்மா பழம் என்று அழைப்பர்கள்.

வழ: எதிரியின் மனைவியின் ஊர் எது?-வல்வெட்டித்துறை.

வழ. அவரின் நிறமென்ன?- கறுப்பு.

வழ: எதிரியின் மனைவியுடன் கதைத்திருக்கிறீரா? - அவர் எனது வீட்டிற்கு வரும்போது கதைப்பேன்.

வழ: ஒரு தினம் எத்தனை முறைவருவார்? - அலுவலிருந்தால் இரண்டொருமுறை வருவார்.

வழ: சிலசமயம் எதிரியின் மனைவி வரும்போது மகன் சூரசங்காரமும் இருப்பார்?-ஆம்.

வழ: உமக்குத் தெரிந்தளவில் எதிரியும் இறந்தவரும் நல்ல நண்பர்கள்? - ஆம்.

வழ: அவர்கள் சொந்தக்காரர்களா?-ஆம்.

வழ: எதிரியின் மனைவியுடன் உனது மகன் சூரசங்காரம் கதைப்பது வழக்கமா?-ஆம்.

வழ: எதிரியின் வீட்டிற்குப் போகும்போது எதிரியின் மனைவியின் தங்கையைக் கண்டிருக்கிறீரா?-நான் காணவில்லை.

வழ: தெரியுமா?-தெரியாது.

வழ: தங்கை இருப்பதென்று தெரியுமா?- கேள்விப்பட்டிருக்கிறேன்.

வழ: படத்திற்குப் போவதென்றால் எதிரியும் உனது மகனும் போவது வழக்கம்?- ஆம்.

வழ: உமது மகன் குடிப்பது வழக்கம்?-சில சமயம் குடிப்பார்.

வழ: வீட்டிற்கு வெறியுடன் வருவார்?-இல்லை.

வழ: கீழ்க்கோர்ட்டில்எனது மகன் சூரசங்காரம் கள்ளுக் குடிப்பது வழக்கமென்றீரா?-ஆம்.

வழ: வெளியில் சாராயம் குடிப்பதென்று தெரியாது என்றீரா?-ஆம்.

வழ: எவ்வளவு காலமாகக் குடிக்கிறார் என்று தெரியாதென்றீரா?ஆம்.

வழ: சிலசமயம் வீட்டிற்கு வெறியுடன் வருவார் என்றீரா?-இல்லை.

## கொடி இறக்கும்காலம்

நீதி: எல்லா வழக்குகளிலும் குடிவெறிதான் அடிப்படையாக இருக்கிறது. இப்போ குடிவெறி முடியும் காலம்.

வழ: இக்காலத்தை 'கொடி இறகும்காலம்' என்பார்கள் பிரபு.

வழ:- வழக்கமாக வீட்டிற்கு வருவாரா?— திருவிழாவிற்குப் போனால் எனது மகன் வீட்டிற்கு வருவதில்லை.

வழ: எந்தக் கோயிலுக்கு இரவில் கும்பிடப்போகிறரோ தெரியாது?-(மௌனம்)

நீதி: திருவிழாவிற்கோ திருவன்ரைவிழாவிற்கோ என்று தெரியாதா?-தெரியாது.

வழ: மாதத்தில் எத்தனை நாள் மகன், வீட்டிற்கு வராமலிருப்பார்?-ஒரு நாள்.

வழ: எதிரி உமது மகனை கூட்டிப்போகும் முதல் நாள் இரவு உமது மகன் இரவு முழுவதும் வீட்டிலிருந்தாரா?- ஆம்.

வழ: அன்று உமது மகன் தொழிலால் எப்போது வந்தார்?-காலை 9 மணிக்கு.

வழ: அன்று உமது மகனை சந்திரசேகரம் வந்து கூப்பிட்டாரா?-இல்லை.

வழ: கீழ்க்கோர்ட்டில், சந்திரசேகரம் மட்டும் எனது மகனைக் கூப்பிட்டார் என்றீரா?-ஞாபகமில்லை.

வழ: படத்திற்குப்போக நீர் காசு கொடுக்க மறுத்ததும் உமது மகன் மீன் பிடிக்கும் வலையை அடைவு வைக்கப் போவதாக கூறினாரா?-ஆம்.

வழ: வலை கடற்கரையில் இருந்தது?-ஆம்.

நீதி: உமக்கு ஆங்கிலம் கொஞ்சம் தெரியுமா?-தெரியாது.

(இங்கிலீஷில் முடிக்குரிய வழக்கறிஞர் கேட்ட கேள்வியொன்றை எதிரி தரப்புவழக்கறிஞர் ஆட்சேபித்தபோது நீதியரசர் அதை ஏற்றுக்கொண்டு அக்கேள்வியை நிராகரித்தார்.)

நீதி: மகன் வெளியில் போகும்போது நன்றாக உடுத்திக் கொண்டு போவாரா?- ஆம்.

நீதி: உடுப்பைப்பற்றி கவனமெடுப்பார்?-ஆம்.

நீதி: திருவிழாவிற்கு உடுத்துப் போவதில் விருப்பம்?- ஆம்.

நீதி: எதிரியின் பெண்சாதி உம் வீட்டிற்கு வரும்போது உனது மகன் நன்றாகக் கதைப்பார்?—ஆம்.

நீதி: எதிரியின் மனைவி வெட்கமில்லாமல் உனது மகனுடன் கதைப்பாரா?—நல்லாய்க் கதைப்பார்கள், நெருங்கிக் கதைப்பார்கள்.

ஜூரி: எதிரி தனது மனைவியுடன் உனது வீட்டிற்கு அடிக்கடி வருவார்களா?-ஆம் வந்து சாப்பிடுவார்கள்.

நீதி: உமது மகனும் எதிரியும் நல்ல நண்பர்களானபடியால்தான் அப்படி நடக்கிறது?-ஆம்.

## மச்சான் சாட்சியம்

செல்லத்துரை சிவபாதசுந்தரம் சாட்சியமளித்தபோது கூறியதாவது:—

சம்பவம் நடந்ததினம் எனக்கு ஞாபகமிருக்கிறது. அன்று இரவு 7-30 மணிக்கு பஸ்ஸில் பொலிகண்டியிலிருந்து எனது வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தேன். அந்த பஸ் பருத்தித்துறைக்குப் போகும் பஸ். இறந்தவராகிய சூரசங்காரத்தை குட்டி என்று கூப்பிடுவார்கள். எதிரியும், இறந்தவரும், எதிரியின் தம்பியும், மச்சானும், ஒன்றைவிட்ட தமையனும், எனது பஸ்ஸில் ஏறினார்கள். நான் குட்டியுடன் (இறந்தவர்) கதைத்தேன். எங்கே போவதாக கேட்ட போது மற்ற நால்வருடனும் படம்பார்க்க போவதாகக் கூறினர். நான் எனது கிராமத்தில் இறங்கிவிட்டேன். அப்பொழுது சூரசங்காரமும் மற்றவர்களும் பஸ்ஸில்போய்க் கொண்டிருந்தார்கள்.

## குறுக்குவிசாரணை

வழ: இறந்தவர் உமது மச்சான்? - ஆம்.

வழ: எவ்வளவு காலமாக அவரைத் தெரியும்? - பலகாலமாக.

வழ: அவர் விவாகமானவர்? —ஆம்.

வழ: பஸ்ஸில் போவதற்கு எத்தனை நாட்களுக்கு முன் மச்சான் வீட்டிற்குப் போனீர்?— 6 மாதத்திற்கு முன்.

வழ: கடைசியாகப் போனபோது அவர் மனைவி இருந்தாரா? - இல்லை.

வழ: மனைவியுடன் பிரிந்து இருந்தார்? - அப்பொழுது மனைவி தாயார் வீட்டில் இல்லை. மாமியார் வீட்டில் இருந்தார்.

வழ: எதிரி உமக்கு சொந்தமில்லை? - இல்லை.

வழ: எதிரியின் பெயர் தெரியுமா? - ஆம், வல்வெட்டித்துறையில் நான் படிக்கிற காலம் முதல் தெரியும். பத்து வருடத்திற்கு முன்பு தெரியும்.

வழ: மறுநாள் காலை மச்சானின் சடலமிருந்த இடத்திற்கு போனீரா? - ஆம். கடற்கரை மணலில் சடலம் கிடந்தது.

வழ: அந்தஇடத்தில் 'மெர்க்குரி லைட்' இருந்ததா? - மறுநாள் காலை பார்த்தபோது அந்த 'லைட்' உடைக்கப்பட்டிருந்தது.

வழ: எப்போது உடைக்கப்பட்டதென்று தெரியுமா?-தெரியாது.

நீதி: சாட்சி வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்.

வழ: ஆம் பிரபு.

## சூரசங்காரம் ஷேவ் எடுத்தார்

முத்தையா வல்லி சாட்சியமளித்தபோது கூறியதாவது:

சம்பவம் நடந்த தினம் எனது சலூன் திறந்திருந்தது. இறந்தவராகிய சூரசங்காரத்தை தெரியும். அன்று இரவு 8 மணிக்கு சூரசங்காரம் ஷேவ் எடுக்க வந்தார். அவருடன் மூவர் வந்தனர். எனக்கு மற்றவர்களின் பெயர் தெரியாது. கண்டால் சொல்லுவேன்.

முடி வழ: நீதிமன்றத்துக்குள் பார்த்துச் சொல்லும் யாராவது இருக்கிறார்களா?

சாட்சி: (எதிரியை காட்டி) கூண்டிலிருக்கிறார். இருவரும் ஷேவ் எடுத்துவிட்டு கூடிப் போனார்கள்.

## சாத்திரியார் வந்தார்

செல்லையா பொன்னுச்சாமி சாட்சியமளித்தபோது கூறியதாவது:

எனது கடை யாழ்ப்பாணம் பருத்தித்துறை ரோட்டில் இருக்கிறது. 63-ம் ஆண்டு ஆகஸ்ட் 27-ந் திகதி பருத்தித்துறையிலிருக்கும் சாஸ்திரியார் கடைக்கு வந்தார். அவருடன் சிலர் வந்தார்கள். அவர்கள் முன்பும் வருவார்கள்.

## சாராயமும் முட்டையும்

சாராயப்போத்தல் ஒன்று கொண்டுவந்து குடிக்கப்போவதாக கூறினர்கள். நான் கடையில் ஆட்கள் இருப்பதாகக் கூறினேன். சாத்திரியாரும் மற்றவர்களும் திரும்பி வந்து முட்டை சாப்பிட்டார்கள். அப்பொழுது ஒருவரிடமும்சாராயப்போத்தல் இல்லை. முதல் வந்தபோது சூரசங்காரம் கையில்தான் சாராயப் போத்தல் இருந்தது. மறுநாள் காலை நான் கடற்கரைக்குப் போனபோது முதல்நாள் இரவு வந்தவர்களில் ஒருவர் இறந்துகிடந்தார்.

நீதி: உமது கடை தேனீர் கடையா?- காப்பிக்கடையா?- எல்லாம் விற்கிறது. லேகியமும் விற்கிறது.

நீதி: அன்று லேகியமும் வாங்கிச் சாப்பிட்டார்களா?- இறந்தவர் லேகியம் வாங்கிக் கொண்டுஉள்ளே போனார்.

நீதி: லேகியம் விற்க லைசன்ஸ் தேவையா?-லைசன்ஸ் தேவையில்லை. எல்லா இடமும் வாங்கலாம்.

நீதி: சிறு குழந்தைகளும் லேகியம் வாங்கலாம். கட்டுப்பாடு இல்லையே?-ஆம்.

நீதி: லேகியம் மருந்தா?- ஆம், பத்தியம் தேவையில்லை, நன்றாகப் பசியைக் கிளப்பும்.

நீதி: நீர் வெளிப்படையாக உண்மை பேசியதையிட்டு சந்தோஷம்.

மேல் விசாரணை இன்று காலை 9-15 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# இலங்கைப் பிரஜையான பின்னரும் இந்தியத் தமிழரா?

## நீதிமன்றத்தில் வழக்கு, தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஞாயிறு

இந்தியத் தமிழர் ஒருவருக்கு பிரஜா உரிமை வழங்கப்பட்ட பின்னரும் அவர் இலங்கைத் தமிழரா அல்லது இந்தியத் தமிழரா என்ற பிரச்சினை சுப்ரீம் கோர்ட்டில் மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் விவாதிக்கப்பட்டது.

நீதியரசர்கள் பெர்னுண்டோ, சில்வா, அலஸ் ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கு நடைபெற்றது. மாத்தனை விகாரை வீதியைச் சேர்ந்த அலங்காரம் பசன்கா தனது பிள்ளையின் பிறப்புப் பத்திரத்தில் பெற்றேரை இந்தியத் தமிழர் என்று குறிப்பிட்டிருப்பதை மாற்றி இலங்கைத் தமிழர் அல்லது தமிழர் என்று மாற்ற வேண்டுமென்று கோரி தாக்கல் செய்த வழக்கில் மாத்தனை மாவட்ட நீதிபதி இதற்கு மறுத்து தீர்ப்பளித்ததை எதிர்த்து சுபரீம் கோர்ட்டில் மனுதாக்கல் செய்திருந்தார்.

திரு. அலங்காரம் பசன்கா தாக்கல்செய்த மனுவில்தாமும் தமது மனைவியும் இந்தியாவில் பிறந்ததாகவும் ஆனல் இலங்கையில் பிரஜா உரிமை பெற்றநாள் முதல் இலங்கைத் தமிழராகவே அவர்கள் கருதப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் சில்வா, சிறிஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அவர்கள் மாறுபட்ட கருத்துடையவர்களாய் இருந்தார்கள். மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் இவ்வழக்கு விவாதிக்கப்படும் வரை இவ்வழக்கு முடிவை தற்காலிகமாக ஒத்திவைக்கும்படி உத்தரவிட்டு நீதியரசர் சில்வா கூறியிருந்ததாவது:-

"பிறப்புப் பத்திரத்தில்பெற்றேரின் இனமும் பதிவுக்காரரால் நிரப்பப்படல் வேண்டும் அத்துடன் அந்தப்படிவத்தில் உள்ள பின்குறிப்பில் பதியப்படுபவர்கள் என்ன இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிடல் வேண்டும்.

இந்தப் பெற்றேர்களின் பிறப்பு இந்தியாவில் பதியப்பட்டிருக்கின்றது. ஆனல் அவர்கள் பின்பு தங்களது பிள்ளைகள் பிறப்பதற்கு முன்னல் இலங்கைப் பிரஜைகளாக பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படியான சந்தர்ப்பத்தில் அப்பிள்ளைகளின் பெற்றேர்கள் இலங்கைத்தமிழரென பிறப்புப் பத்திரத்தில் எழுதப்பட வேண்டுமா என்பதுதான் கேள்வி. பிறப்பினல் இந்திய தமிழர்களான அக்குழந்தைகளின் பெற்றேர்கள் இலங்கையில் பதிவு காரணமாக பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதே எனது கருத்தாகும். பிரஜா உரிமை பதிவிற்காக அவர்கள் இந்தியத் தமிழர் என பதிவு செய்யப்பட வேண்டும். இவ்விஷயத்தில் எனது சகோதர நீதியரசர் திரு. சிறிஸ்கந்தராசா வேறு கருத்துடையவராகக் காணப்படுகிறர். ஆதலால் இவ்வழக்கை மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் விவாதிக்க உத்தரவிடுகிறேன்."

நீதியரசர் திரு. சிறிஸ்கந்தராசா இவ்வழக்கு சம்பந்தமாக கூறியிருப்பதாவது:-

நான் இம்முடிவை ஏற்றுக்கொள்ளுகின்றேன், ஆனல் ஒரு தடவை இந்தியத் தமிழர் ஒருவர் இலங்கையில் பிரஜா உரிமை பெற்றபின் அவர் தொடர்ந்து இந்தியத் தமிழரென கருதப்பட மாட்டாரென நான் கருதுகின்றேன். ஒருதடவை அவர் இலங்கைப் பிரஜையானபின் அவர் என்றும் இலங்கையராகவே கணிக்கப்பட வேண்டும். அவரது இனம் பின்னர் இலங்கையர் என்றே கருதப்பட வேண்டும்"

வழக்காளி சார்பில் வழக்கறிஞர் திரு. எம். திருச்செல்வம் கியு. சி., திருவாளர்கள் ரி. சோமசுந்தரம், மார்க் பேர்ணுந்தோ ஆகியோரின் உதவியுடன் ஆஜராஞர். சிரேஷ்ட முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எச். தெகரகொட முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஏ. வி. டி. எஸ். விஜயசேகராவின் உதவியுடன் ரெஜிஸ்டார் ஜெனரல் சார்பில் ஆஜராஞர்.

வழக்கறிஞர் திரு. திருச்செல்வம் கூறியதாவது.-

"1948-ம் ஆண்டுக்கு பின் இலங்கையில் பிறந்த தமிழர் தன்னை இலங்கைத் தமிழரென கூறுவர். ஒருவர் வசிக்கும் இடங்கள் மாற்றப்படலாமே ஒழிய அவரது இனம் மாறுபடாது. இந்தியர் ஒருவர் இலங்கை பிரஜா உரிமை பெற்ற பின் அவருக்கு இந்தியாவில் எவ்வித உரிமையும் கிடையாது. இந்தியாவுடன் உள்ள எல்லாத் தொடர்புகளையும் நீக்கிய ஒரு தமிழர் இலங்கையில் பிரஜா உரிமை பெற்றபின் இலங்கைத் தமிழராகவே கருதப்படல் வேண்டும்.

இலங்கைப் பிரஜா உரிமை பெற்றபின் அவர் தன்னை இந்தியத் தமிழர் என்று கூறுவது அரசாங்கத்திற்கே இழுக்காகும். சட்டம், விண்ணப்பதாரரின் இனத்தை மட்டுமே குறிப்பிடும்படி கூறுகிறதேயன்றி அவரது பிறந்த இடத்தையல்ல. இக்கேள்வி சம்பந்தமாக சட்டத்துடன் ஆதாரம் காட்டிப் பேசிய சிரேஷ்ட முடிக்குரிய வழக்கறிஞர் பிறப்பு இறப்பு பதிவு சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும் வரை இந்தியத் தமிழரென்றே பதிய வேண்டுமெனக் குறிப்பிட்டார்

மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர்தர நீதிமன்றத்தில் இவ்வழக்கு எடுத்துக் கொள்ளபட்ட பொழுதுநீதியரசர்கள் தங்கள் தீர்ப்பை ஒத்திவைத்தார்கள்.

# வெளிநாடுசெல்ல விதிகள் தளர்வு

கொழும்பு, திங்கள்

வெளிநாட்டு அரசாங்கங்கள் ஏஜன்சிகள், ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் அழைப்பின் பேரில் குறிப்பிட்ட நாடுகளுக்குச் செல்ல விரும்புபவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விதிகளை அரசாங்கம் தளர்த்தியுள்ளது.

கலை, விஞ்ஞானம் ஆகியதுறைகளில் ஈடுபட்டுள்ள கண்ணியமான தனிமனிதர்களுக்கு இவ்வித துறைகளில் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்காக விடுக்கப்படும் அழைப்புகளுக்கு மேற்படி விதிகள் தளர்த்தப்பட்டுள்ளது.

இவ்வித ரீதியில் நேரடியாக அழைப்பைப் பெறுபவர்கள் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுக்கு, அழைப்பு சம்பந்தப்பட்ட தினத்திலிருந்து குறைந்தது 6 வாரத்துக்கு முன்னராவது அங்கீகாரத்துக்காக மனுச் செய்ய வேண்டும்.

# ஆசிரியர் கழக வருடாந்த கூட்டம்

வட்டுக்கோட்டை, திங்கள்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகத்தின் வருடாந்த கூட்டம் இந்துக் கல்லூரியில் கழகத் தலைவர் திரு ச. அம்மையப்பர் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாகியது

சென்ற வருடாந்தக் கூட்டம், கணக்கு பரிசோதகர் அறிக்கை ஆகியன வாசிக்கப்பட்டு சபையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பண்டிதர் த. சுப்பிரமணியம், உப-தலைவர் திரு வ. துரைசாமி, கௌரவ காரியதரிசி: திரு. நா. சி. கந்தசாமி, உப-காரியதரிசி: செல்வி சந்திரா அம்பலவாணர், தனாதிகாரி: செல்வி சுகிர்தலட்சுமி சபாநாயகம், வாசிகசாலை காரியதரிசி: செல்வி சண்முகலட்சுமி பொன்னுததுரை. நிர்வாக சபை அங்கத்தவராக கடந்த வருடத் தலைவர் திரு. ச. அம்மையப்பரும் தெரிவு செய்யப்பட்டார்.

# இன்று பார்லிமெண்ட்

கொழும்பு, செவ்வாய்

பார்லிமெண்ட் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964- ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது"